ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1817/28 - 2013 ජූලි මස 03 වැනි බදාදා - 2013.07.03

*1817/28 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

*3(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**வடக்கு/கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் குழப்பங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்களும் வேறோர் இடத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களுமான இலங்கைப் பிரசைகளை 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்கான குறைநிரப்பிப் பட்டியல்**

*தேர்தல் மாவட்ட இல. 10 – யாழ்ப்பாணம்*

மேலே காட்டப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்குரிய இடம்பெயர்ந்தவர்களுக்கான குறைநிரப்பிப் பட்டியலின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும் அப்பட்டியல் அலுவலக நேரத்தினுள் பொது மக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம்/கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதெனவும் 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3(1) ஆம் பிரிவிற்கிணங்க இத்தால்அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்குறித்த இடம் பெயர்ந்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்குரிய அக்குறைநிரப்பிப் பட்டியலில் தனது பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்குத் தகைமை இருப்பினும் தனது பெயர் குறைநிரப்பிப் பட்டியலில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனும் ஒருவர் தனது பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்காக அல்லது தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்காக விடயத்திற்கேற்றவாறு மேன்முறையீடு சமர்ப்பிப்பாராயின் அவ்வாறு மேன்முறையீடு சமர்ப்பிக்கின்றவர் அது தொடர்பில் மேற்குறித்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க வெளியிடப்பட்டுள்ள படிவத்திலான கோரிக்கையொன்றை யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் ஒரு வாரத்தினுள் இது தொடர்பான அனைத்து விண்ணப்பப்படிவங்களும் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.

3. மேற்குறித்த தேர்தல் மாவட்டத்திற்குரிய குறைநிரப்பிப் பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள எவரேனும் ஒருவருக்கு தனது பெயர் அல்லது அப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எவரேனும் ஒருவரின் பெயர் அத்தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பாக அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற ஆட்சேபனைகளை மேற்படி சட்டத்தில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு விடயத்திற்கேற்ப ''ஊ''

*படிவத்திற்கிணங்கியவாறு இரண்டு பிரதிகளில் தயாரித்து யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படல் பற்றித் தெரிவிக்கப்படுகின்ற அனைத்து ஆட்சேபனைகளும், இவ்வறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள் யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*இவ்வறிவித்தல் யாழ்ப்பாணம்/கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வரை காட்சிப்படுத்தப்படும்.*

*4. ஏதேனுமொரு மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்காகவும் எவரேனும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்க்குமாறு அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்குமாறு வேறு எவரேனுமொருவரால் செய்யப்படுகின்ற உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகவும் ஆட்சேபனை தெரிவிப்பதற்காகவும் தேவையான படிவங்களை யாழ்ப்பாணம்/கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

*ஏ. ஓ. எம். நபீல்,*
*உதவிப் பதிவு அலுவலர்,*
*தேர்தல் மாவட்ட இல. 10 – யாழ்ப்பாணம்.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2013, யூலை 03.*

*7-518/1*

---

## *2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

*3(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

***வடக்கு/கிழக்கு மாகாணங்களில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் குழப்பங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்களும் வேறோர் இடத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படாதவர்களுமான இலங்கைப் பிரசைகளை 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்கான குறைநிரப்பிப் பட்டியல்***

*தேர்தல் மாவட்ட இல. 11 -வன்னி*

*மேலே காட்டப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்குரிய இடம்பெயர்ந்தவர்களுக்கான குறைநிரப்பிப் பட்டியலின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும் அப்பட்டியல் அலுவலக நேரத்தினுள் பொது மக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மன்னார்/வவுனியா/ முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதெனவும் 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3(1) ஆம் பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2. மேற்குறித்த இடம் பெயர்ந்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்குரிய அக்குறைநிரப்பிப் பட்டியலில் தனது பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்குத் தகைமை இருப்பினும் தனது பெயர் குறைநிரப்பிப் பட்டியலில் உட்சேர்க்கப்பட்டிராத எவரேனும் ஒருவர் தனது பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்காக அல்லது தொடர்ந்தும் வைத்துக் கொள்வதற்காக விடயத்திற்கேற்றவாறு மேன்முறையீடு சமர்ப்பிப்பாராயின் அவ்வாறு மேன்முறையீடு சமர்ப்பிக்கின்றவர் அது தொடர்பாக மேற்குறித்த தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கிணங்க வெளியிடப்பட்டுள்ள படிவத்திலான கோரிக்கையொன்றை மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதி முதல் ஒரு வாரத்தினுள் இது தொடர்பான அனைத்து விண்ணப்பப்படிவங்களும் மன்னார்/ வவுனியா/ முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.*

*3. மேற்குறித்த தேர்தல் மாவட்டத்திற்குரிய குறைநிரப்பிப் பட்டியலில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள எவரேனும் ஒருவருக்கு தனது பெயர் அல்லது அப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எவரேனும் ஒருவரின் பெயர் அத்தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டுள்ளமை தொடர்பாக அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற ஆட்சேபனைகளை மேற்படி சட்டத்தில் கட்டளையிடப்பட்டுள்ளவாறு விடயத்திற்கேற்ப "ஊ" படிவத்திற்கிணங்கியவாறு இரண்டு பிரதிகளில் தயாரித்து மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படல் பற்றித் தெரிவிக்கப்படுகின்ற அனைத்து ஆட்சேபனைகளும், இவ்வறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள் மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*இவ்வறிவித்தல் மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வரை காட்சிப்படுத்தப்படும்.*

*4. ஏதேனுமொரு மேன்முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்காகவும் எவரேனும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்க்குமாறு அல்லது தொடர்ந்தும் வைத்திருக்க இடமளிக்குமாறு வேறு எவரேனுமொருவரால் செய்யப்படுகின்ற உரிமைக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் ஆட்சேபனை தெரிவிப்பதற்காகவும் தேவையான படிவங்களை மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.*

*ஏ. எம். எம். கபீர்,*
*உதவிப் பதிவு அலுவலர்,*
*தேர்தல் மாவட்ட இல. 11 - வன்னி.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*வவுனியா.*
*2013, யூலை 03.*

*7-518/2*